# தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான அறிவிப்புகள்

## I. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வாகனங்கள் வழங்குதல்

1. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் அனைத்து நிலையங்களிலும் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் உள்ள நீர்தாங்கி வண்டிகளுக்கு மாற்றாக புதிய ஊர்திகள் வழங்கும் திட்டத்தின் மூன்றாவது கட்டமாக 4 கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில் 15 புதிய நீர்தாங்கி வண்டிகள் வழங்கப்படும்.

2. மாவட்ட தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் சிறிய நுரை கலவை தகர்வு ஊர்திகள் அதாவது Small Foam Tenders வழங்கும் திட்டத்தின், மூன்றாவது கட்டமாக

சென்னையில் கோயம்பேடு, திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி சிப்காட், கடலூர் மாவட்டத்தில் கடலூர், ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையம்கோட்டை ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு 2 கோடி ரூபாய் செலவில் 5 சிறிய நுரை கலவை தகர்வு ஊர்திகள் வழங்கப்படும்.

3. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்பட வேண்டும் என்ற குறிக்கோளை விரைவில் எய்தும் வண்ணம் நடப்பு ஆண்டில் 2 கோடியே 24 லட்சம் ரூபாய் செலவில் சென்னை மாவட்டத்தில் உள்ள தண்டையார்பேட்டை மற்றும் தி.நகர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

4. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் உள்ள உதவி மாவட்ட அலுவலர்கள் தங்கள் பணிகளை செவ்வனே மேற்கொள்ள ஏதுவாக மொத்தமுள்ள 46 உதவி மாவட்ட அலுவலர்களுக்கும் ஈப்புகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, 10 உதவி மாவட்ட அலுவலர்களுக்கு 60 லட்சம் ரூபாய் செலவில் 10 ஈர்ப்புகள் வழங்கப்படும்.

5. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அனைத்து நிலைய அலுவலர்களும், தங்கள் பணிகளை செவ்வனே மேற்கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, 50 நிலைய அலுவலர்களுக்கு உதவி மாவட்ட அலுவலர்களுக்கு 35 லட்சம் ரூபாய் செலவில் 50 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும்.

6. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டில் உள்ள புகைப்படப் பிரிவை மேம்படுத்தும் விதமாக நவீன புகைப்பட கருவி மற்றும் வீடியோ சாதனங்கள் 4 லட்சத்து56 ஆயிரம் ரூபாய் செலவினத்தில் வாங்கி வழங்கப்படும்.

7. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14 அன்று தீத்தொண்டு நாள் அனுசரிக்க ஏதுவாக, இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கும் 500/– ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை தற்போதைய பொருளாதார நிலையை ஒப்பிடும்போது மிகக்குறைவாக உள்ளதால், இனிவருங்காலங்களில் ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கும் 500/– ரூபாயிலிருந்து 3000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு

8 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

## II. பணியாளர் நலன்

8. அனைத்து தீயணைப்பு வீரர்களுக்கும் தீயிலிருந்து பாதுகாக்கும் தற்காப்பு உடைகள் வழங்கும் திட்டத்தின் மூன்றாவது கட்டமாக, 5 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் 1000 "தற்காப்பு உடைகள்" அதாவது Personal Protective Equipment அதற்குரிய தீ பாதிக்காத காலணிகள் மற்றும் தலைகவசங்கள் ஆகியவற்றுடன் வழங்கப்படும்.

9. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிலுள்ள வான்நோக்கி நகரும் ஏணி கொண்ட ஊர்திகளை இயக்கும் பணியாளர்களுக்கு அவர்களின் வேலைத்திறனை கருத்திற்கொண்டு மாதமொன்றிற்கு 1000/–

ரூபாய் சிறப்பு படியாக வழங்கப்படும். இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

10. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் உள்ள இசைமேள குழுவிற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் வரும் 1200/– ரூபாய் மானியத்தை 50,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.